வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
Velanai Central College Old Students' Association - Canada
(A Registered Non-Profit Organization)

# வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
## 5வது ஆண்டாக வழங்கி வரும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதியுதவி

எமது தாயகத்தில் பல்வேறு பாடசாலைகளில் கல்வி கற்றவர்கள் தமக்குக் கல்வி அறிவூட்டிய பாடசாலைகளின் பெயரில் பழைய மாணவர் சங்கங்களை அமைத்து அவற்றின் மூலம் பல நற்காரியங்களை ஆற்றி வருகின்றார்கள். இந்தவகையில் தீவகத்தின் கலைக் கோயிலாகத் திகழும் வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கமானது 1995ம் ஆண்டு ஆவணி மாதம் 2ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கம் தனது நீண்டகாலச் சிறப்பான செயற்பாடுகளின் மூலம் கனடாவில் இயங்கும் மூத்த மற்றும் முதன்மையான பழைய மாணவர் சங்கங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. குறிப்பாகக் கடந்த ஐந்தாண்டுகளாக இச்சங்கம் நடைமுறைப்படுத்திவரும் அர்த்தமுள்ள செயற்திட்டங்கள் மிகவும் பயனுள்ளதும், அனைவராலும் பாராட்டப்பட்டும், மற்றவர்களால் பின்பற்றப்பட்டும் வருகின்ற வகையில் ஓர் முன்னு தாரணமான சங்கமாக இயங்கி வருகின்றது என்றால் அது மிகையல்ல.

வேலணை மத்திய கல்லூரியிலிருந்து பல்கலைக்கழக அனுமதி பெற்றுப் பொருளாதார வசதியின்மையால் தமது படிப்பைத் தொடரமுடியாமல் அல்லலுறும் 23 மாணவர்களுக்கு (யாழ் பல்கலைகழகம் - 15 மாணவர்கள், கிழக்குப் பல்கலைகழகம் - 6 மாணவர்கள், கொழும்புப் பல்கலைக்கழகம் - 1 மாணவர், பேராதனைப் பல்கலைக்கழகம் - 1 மாணவர்) மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு தலா 3000.00 ரூபா வீதம் மாதம் 69, 000.00 ரூபா நிதியுதவியை தற்பொழுது வழங்கிவருகின்றோம். யூன்- 2011 முதல் நடைமுறையிலுள்ள இந்நிதியுதவித் திட்டமானது ஐந்தாவது ஆண்டாகத் தொடர்ந்து நல்லுள்ளங் கொண்ட பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகளின் அறஞ்சார்ந்த பங்களிப்பின் மூலம் சங்க நிர்வாகத்தால் நுட்பமான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்திற்காக ஒக்ரோபர்- 2015 வரை மொத்தம் 47, 368.00 டொலர்கள் வழங்கப்பட்டுள்ளது. இக்கைங்கரியத்திற்கு நிதியுதவியளித்த சமூக அக்கறை மற்றும் கருணையுள்ளம் படைத்த அனைவரையும் சங்கத்தின் சார்பில் நன்றியுணர்வுடன் பாராட்டி மகிழ்கின்றோம்.

**இத்திட்டத்தின் மூலம் தற்போது உதவிபெறும் 23 மாணவர்கள் பெயர் விபரம்**

நிரோஜன் ஜீவராசா (2ம் வருடம் யாழ் பல்கலைக்கழகம்)
சஜிமீரா வசந்தநாதன் (2ம் வருடம் யாழ் பல்கலைக்கழகம்)
சயுந்தினி யோகரெத்தினம் (2ம் வருடம் கிழக்கு பல்கலைக்கழகம்)
சுவஸ்திகா சுந்தரலிங்கம் (2ம் வருடம் கிழக்கு பல்கலைக்கழகம்)
தர்சிகா சிவராசா (3ம் வருடம் யாழ் பல்கலைக்கழகம்)
வக்சலா லெட்சுமணன் (3ம் வருடம் யாழ் பல்கலைக்கழகம்)
சிந்துசா அருட்பிரகாசம் (3ம் வருடம் யாழ் பல்கலைக்கழகம்)
கிகிதா இரட்ணம் (3ம் வருடம் யாழ் பல்கலைக்கழகம்)
தனுசா இராஜேந்திரன் (3ம் வருடம் யாழ் பல்கலைக்கழகம்)
ஜமுனா பாலசுப்ரமணியம் (3ம் வருடம் யாழ் பல்கலைக்கழகம்)
தர்சன் சாந்தலிங்கம் (3ம் வருடம் யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாகம்)
சதீஷ்கரன் மோகநாதன் (3ம் வருடம் கிழக்கு பல்கலைக்கழகம்)
ரகீதா தவயோகராஜா (3ம் வருடம் கிழக்கு பல்கலைக்கழகம்)
சுவர்ந்தினி சுந்தரராசா (3ம் வருடம் கிழக்கு பல்கலைக்கழகம்)
ரோமென்ஷா அன்ரன் (3ம் வருடம் கிழக்கு பல்கலைக்கழகம்)
நிரோசன் அருட்பிரகாசம் (3ம் வருடம் கொழும்பு பல்கலைக்கழகம்)
ஜனோச் தனபாலசிங்கம் (3ம் வருடம் பேராதனை பல்கலைக்கழகம்)
தரணீதரன் நடேசமூர்த்தி (4ம் வருடம் யாழ் பல்கலைக்கழகம்)
வாகீசன் குமாரசாமி (4ம் வருடம் யாழ் பல்கலைக்கழகம்)
துஷ்யந்தி சதானந்தஜகன் (4ம் வருடம் யாழ் பல்கலைக்கழகம்)
சிந்துஜா இராசநாயகம் (4ம் வருடம் யாழ் பல்கலைக்கழகம்)
நிசாந்தி குணபாலசிங்கம் (4ம் வருடம் யாழ் பல்கலைக்கழகம்)
ஜனார்த்தனன் பாலசந்திரன் (4ம் வருடம் யாழ் பல்கலைக்கழகம்)

**இந்த வருடம் பட்டதாரிகளாக வெளியேறிய 14 மாணவர்கள் பெயர் விபரம்:**

ஜமுனா கந்தசாமி (யாழ் பல்கலைக்கழகம்)
சுவேதிகா வீவேகானந்தன் (யாழ் பல்கலைக்கழகம்)
குஜந்தி குகதாசன் (யாழ் பல்கலைக்கழகம்)
நீரஜா வேதாரணியம் (யாழ் பல்கலைக்கழகம்)
துஷ்யந்தன் சிவபாதம் (யாழ் பல்கலைக்கழகம்)
கவிதா குலேந்திரன் (யாழ் பல்கலைக்கழகம்)
ரசினா செல்லத்துரை (யாழ் பல்கலைக்கழகம்)
அனுசிகா பாலசுப்ரமணியம் (யாழ் பல்கலைக்கழகம்)
கம்ஷா சிவராசா (கிழக்கு பல்கலைக்கழகம்)
புஷ்பமாலினி பொன்னம்பலம் (கிழக்கு பல்கலைக்கழகம்)
தர்மினி நாகேஸ்வரன் (கிழக்கு பல்கலைக்கழகம்)
ஜெசிந்தா கிருஷ்ணமூர்த்தி (கிழக்கு பல்கலைக்கழகம்)
அர்ச்சனா வனிதராசா (கிழக்கு பல்கலைக்கழகம்)
அபிரா நாகரட்ணம் (கிழக்கு பல்கலைக்கழகம்)

குறிப்பு: முதலாம் ஆண்டிற்கான மாணவர்களின் விண்ணப்பங்களிலுள்ள விபரங்கள் வழமைபோல் நன்கு பரிசீலிக்கப்பட்டு நிர்வாகசபையால் அங்கீகரிக்கப்படும் மாணவர்கள் ஜனவரி 2016 முதல் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். காலத்தின் கட்டாயமான இச்சீரிய பணியினைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்குச் சங்கத்தின் அங்கத்தவர்கள், கல்லூரியின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் மற்றும் புலம்பெயர் மண்ணின் வர்த்தகப் பெருமக்கள் அனைவரும் தமது முழுமையான ஆதரவையும் தம்மால் இயன்ற பங்களிப்பையும் நல்குமாறு சங்கத்தின் சார்பில் அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகட்கு:**

**செழியன் (தலைவர்): 416-949-7795**
**சிவா (செயலாளர்): 416-562-4141**
**சிறீதரன் (பொருளாளர்): 416-661-3494**

Website: vccosacanada.com • E-mail: vccosacanada@gmail.com • Facebook: Vccosa Canada